


கிரீம்ஸ் துகார், 149, கிரீம்ஸ் சாலை, சென்னை– 600 006. தொலைபேசி: 044–4223 6000

# திருக்குறள் விழா 2012



## மாணவர் பேச்சுப் போட்டி

**ஊடகப் பங்குதாரர் (Media Partner) :**

JAYA PLUS

அன்புடையீர்,

ஸ்ரீராம் இலக்கியக் கழகம் கடந்த 1988 ஆம் ஆண்டு முதல் திருக்குறள் விழாவினை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறது. திருக்குறள் விழாவின் ஒரு பகுதியாக, மாணவர்களிடையே திருக்குறளின் கருத்துகளைப் பரப்பவும், தமிழார்வத்தை வளர்க்கவும், பேச்சாற்றலைப் பெருக்கவும் மாநில அளவில் பேச்சுப் போட்டிகளை இவ்வமைப்பு நடத்தி வருகிறது.

இந்த ஆண்டு இப்போட்டி வரும் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ளது. இடைநிலை, உயர்நிலை, மேல்நிலை, கல்லூரி ஆகிய நான்கு பிரிவுகளில் மாணவர்களுக்கு இப்போட்டிகள் நடத்தப்படும்.

முதல் சுற்றுப் போட்டிகள் சென்னை, வேலூர், கோவை, சேலம், நெல்லை, மதுரை, திருச்சி, புதுச்சேரி ஆகிய எட்டு நகரங்களில் நடைபெறும். இறுதிச் சுற்றுப் போட்டி சென்னையில் நடைபெறும். **இந்த இறுதிச் சுற்று, ஜெயா பிளஸ் தொலைக்காட்சியில் நவம்பர் மாதம் ஒளிபரப்பாகும்.**

ஒவ்வொரு பிரிவிலும் (இடைநிலை/உயர்நிலை/மேல்நிலை/கல்லூரி) மாணவ, மாணவியருக்கு கீழ்க்காணும் முறையில் போட்டிகள் நடத்தப்படும்.

**கால் இறுதிச் சுற்று:** இச்சுற்று காலை 11 மணி முதல் பகல் 1 மணி வரை நடைபெறும். பேச்சுப் போட்டியில் பங்கு பெறும் மாணவர்கள் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, வேறுவேறு வகுப்பறைகளில் நடத்தப்படும் பேச்சுப் போட்டிகளில் கலந்து கொள்வர். ஒவ்வொரு வகுப்பறையிலும் முதல் இரண்டு போட்டியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களிடையே அரை இறுதிச் சுற்று நடத்தப்படும்.

**அரை இறுதிச் சுற்று:** இச்சுற்று பகல் 2 மணி முதல் 4 மணி வரை நடைபெறும். கால் இறுதிச் சுற்றில் தகுதி பெற்றவர்களுள் முதல் இருவர் தெரிவு செய்யப்பட்டு, சென்னையில் நடக்கும் இறுதிச் சுற்றுக்கு அழைக்கப்படுவர். அரை இறுதிச் சுற்றில் பங்கேற்கும் அனைவருக்கும் ஆறுதல் பரிசுகள் உண்டு.

**இறுதிச் சுற்று:** ஒவ்வொரு மையத்திலும் ஒரு பிரிவிற்கு இருவர் வீதம் எட்டு மையங்களிலிருந்து முகிழ்த்தெழுந்த மொத்தம் 16 போட்டியாளர்கள் இறுதிச் சுற்றில் கலந்து கொள்வர். அவர்களிலிருந்து முதல் மூன்று பேர் பரிசுக்குரியவர்களாகத் தெரிவு செய்யப்படுவர்.

**பரிசுகள்:** ஒவ்வொரு பிரிவிலும் மாநில அளவில் முதல் பரிசு பெறும் மாணவருக்கு ரூ. 10,000, இரண்டாம் பரிசு பெறும் மாணவருக்கு ரூ. 7,500, மூன்றாம் பரிசு பெறும் மாணவருக்கு ரூ. 5,000 ஆகிய பணப் பரிசுகளும், முதல் பரிசு பெறும் பள்ளி / கல்லூரிக்குக் கேடயமும் வழங்கப்படும். இறுதிச் சுற்றில் கலந்து கொள்ளும் மாணவர்களின் போக்குவரத்து மற்றும் தங்குவதற்கான செலவுகளை (சென்னை நீங்கலாக) ஸ்ரீராம் இலக்கியக் கழகம் ஏற்றுக் கொள்ளும்.

நிகழ்ச்சி நாளன்று, ஒவ்வொரு மையத்திலும் காலை 9.30 மணிக்கு அப்பகுதியிலுள்ள உயர் அதிகாரி ஒருவரைக் கொண்டு தொடக்க விழா நிகழ்ச்சியும், மாலை 4 மணிக்கு அறிஞர் ஒருவரைக் கொண்டு நிறைவு விழா நிகழ்ச்சியும் சிறப்பாக நடத்தப்படும்.

**மதிப்பிடும் முறை:** கருத்து, வெளியிடும் பாங்கு, உச்சரிப்பு ஆகியவற்றுக்கு தலா 10 மதிப்பெண்கள் என மொத்தம் 30 மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டு, மாணாக்கர்களின் பேச்சுக்கள் மதிப்பீடு செய்யப்படும்.

**விண்ணப்பம்:** போட்டியில் பங்கு பெற விரும்பும் மாணாக்கர் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து 25.07.2012–க்குள் ஸ்ரீராம் இலக்கியக் கழக அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்ப வேண்டும்.

**ஊடகப் பங்குதாரர் (Media Partner): ஜெயா பிளஸ் தொலைக்காட்சி**

**நிரப்பப் பெற்ற விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 25-07-2012**

# முதல் சுற்று பேச்சுப் போட்டி நடைபெறும் இடங்கள்

| நகரம் | நாள் | இடம் | நேரம் : காலை 9.30 மணி |
|---|---|---|---|
| சென்னை | 4.08.2012<br>சனி | **டாக்டர் எம்.ஜி.ஆர். – ஜானகி மகளிர் கல்லூரி**<br>11 & 13, துர்காபாய் தேஷ்முக் சாலை, ஆர்.ஏ. புரம், சென்னை – 600 028. | தொ.பே.: 044–2493 7382 |
| வேலூர் | 5.08.2012<br>ஞாயிறு | **வேலூர் வள்ளல் N. கிருஷ்ணசுவாமி முதலியார் (C.B.S.E.) ஆங்கில பயிற்றுமொழிப் பள்ளி**<br>56, டி.கே.எம். கல்லூரி சாலை, சாய்நாதபுரம், வேலூர் – 632 001. | தொ.பே.: 0416–2264 704 |
| கோயமுத்தூர் | 11.08.2012<br>சனி | **சபர்பன் மேல்நிலைப் பள்ளி**<br>101, ராஜாஜி சாலை, ராம் நகர், கோயமுத்தூர் – 641 009. | தொ.பே.: 0422–2230 544 |
| சேலம் | 12.08.2012<br>ஞாயிறு | **குகை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி**<br>லயன் மேடு, குகை, சேலம் – 636 006. | தொ.பே.: 0427–2466 007 |
| திருநெல்வேலி | 18.08.2012<br>சனி | **சாஃப்டர் மேல்நிலைப் பள்ளி**<br>எஸ். என். ஹை ரோடு, திருநெல்வேலி – 627 001. | தொ.பே.: 0462–2330 885 |
| மதுரை | 19.08.20121<br>ஞாயிறு | **மதுரைக் கல்லூரி**<br>டி.பி.கே. ரோடு, மதுரை – 625 011. | தொ.பே.: 0452–2673 354 |
| திருச்சி | 25.08.2012<br>சனி | **பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளி**<br>10, மேற்கு பொலிவார் ரோடு, தெப்பக்குளம் , திருச்சி – 620 002. | தொ.பே.: 0431–2704 609 |
| புதுச்சேரி | 26.08.2012<br>ஞாயிறு | **ஆல்ஃபா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி**<br>32, இரண்டாவது தெரு, மங்கலக்ஷ்மி நகர், புதுச்சேரி – 605 013. (பேருந்து நிலையம் அருகில்) | தொ.பே.: 0413 – 2201 469 |

# பேச்சுப் போட்டி தலைப்புகள் (நேரம் : 5 மணித்துளிகள்)

### இடைநிலைப் பிரிவு (வகுப்புகள் 6, 7, 8)

மழித்தலும் நீட்டலும் வேண்டா (280)
(அல்லது)
பொய்யாமை அன்ன புகழ் இல்லை (296)
(அல்லது)
நுணங்கிய கேள்வியர் அல்லார் (419)

### உயர்நிலைப் பிரிவு (வகுப்புகள் 9, 10)

சினத்தின் பகையும் உளவோ பிற ? (304)
(அல்லது)
எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும் (470)
(அல்லது)
தெய்வத்தோடு ஒப்பக் கொளல் (702)

### மேல்நிலைப் பிரிவு (வகுப்புகள் 11, 12)

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார் (76)
(அல்லது)
கல்லார் கண் பட்ட திரு (408)
(அல்லது)
செறுநரைக் காணின் சுமக்க (488)

### கல்லூரிப் பிரிவு

உண்ணாமை வேண்டும் (257)
(அல்லது)
தன் வலியும் மாற்றான் வலியும் (471)
(அல்லது)
பிரிவு ஓர் இடத்து உண்மையான் (1153)

பூர்த்தி செய்த விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

**ஸ்ரீராம் இலக்கியக் கழகம்**

கிரீம்ஸ் துகார், 149, கிரீம்ஸ் ரோடு, சென்னை–600 006.

ஏதேனும் ஐயம் இருப்பின், 044–4901 2100 என்ற தொலைபேசி எண்ணில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.


ஸ்ரீராம் இலக்கியக் கழகம்


கிரீம்ஸ் துகார், 149, கிரீம்ஸ் சாலை, சென்னை– 600 006.

திருக்குறள் விழா

# திருக்குறள் விழா 2012
# மாணவர் பேச்சுப் போட்டி
# விண்ணப்பப் படிவம்



இந்த விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, “ஸ்ரீராம் இலக்கியக் கழகம், கிரீம்ஸ் துகார், 149, கிரீம்ஸ் ரோடு, சென்னை-600 006” என்ற முகவரிக்கு, 25.07.2012-க்குள்அனுப்பி வைக்கவும். வரிசை எண்ணிட்ட அனுமதிச் சீட்டு உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மாணவரின் பெயர்........................................................................

ஆண் ☐ பெண் ☐ பயிலும் வகுப்பு........................................................................

தந்தை / காப்பாளர் பெயர்........................................................................

பள்ளி / கல்லூரி (முழு முகவரியுடன்) ........................................................................

........................................................................

........................................................................

........................................................................

பின்கோடு........................................ தொலைபேசி........................................

வீட்டு முகவரி........................................................................

........................................................................

........................................................................

........................................................................

பின்கோடு........................................ தொலைபேசி........................................

<u>கலந்து கொள்ள விரும்பும் பிரிவு:</u>

இடைநிலை (6,7,8 வகுப்புகள்) ☐ உயர்நிலை (9,10, வகுப்புகள்) ☐ மேல்நிலை (11, 12 வகுப்புகள்) ☐ கல்லூரி ☐

<u>கலந்து கொள்ள விரும்பும் மையம்:</u>

சென்னை ☐ வேலூர் ☐ கோயமுத்தூர் ☐ சேலம் ☐

திருநெல்வேலி ☐ மதுரை ☐ திருச்சி ☐ புதுச்சேரி ☐

........................................ ........................................

தலைமை ஆசிரியர் / முதல்வர் கையொப்பம் — மாணவர் கையொப்பம்

(பள்ளி / கல்லூரி முத்திரையுடன்)

**அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்**

விண்ணப்பம் பெறப்பட்ட நாள்: ........................................ அனுமதிச் சீட்டு எண்: ........................................

# திருக்குறள் விழா 2012 மாணவர் பேச்சுப் போட்டி விதிமுறைகள்

- ஒரு பள்ளியில், ஒவ்வொரு வகுப்பிலும் இருவர் மட்டுமே கலந்து கொள்ளலாம். 6–ஆம் வகுப்பில் இருவர், 7–ஆம் வகுப்பில் இருவர், 8–ஆம் வகுப்பில் இருவர் என இடைநிலைப் பிரிவில் ஆறு பேர், உயர்நிலைப் பிரிவில் நான்கு பேர், மேல்நிலைப் பிரிவில் நான்கு பேர் கலந்து கொள்ளலாம்.
- ஒரு கல்லூரியில், இளநிலைப் பிரிவில் நான்கு பேரும், முதுநிலைப் பிரிவில் இரண்டு பேரும் ஆக மொத்தம் அறுவர் கலந்து கொள்ளலாம்.
- அரசு அங்கீகாரம் பெறாத கல்வி நிலையங்களில் பயில்வோர் மற்றும் தொலைதூரக் கல்வி வழியாகப் பயில்வோர் இதில் கலந்து கொள்ள இயலாது.
- ஒரு பள்ளி/கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள், ஏதேனும் ஒரு மையத்தில் மட்டுமே கலந்து கொள்ளலாம். வெவ்வேறு மையங்களில் கலந்து கொள்ளக் கூடாது. உதாரணமாக, காஞ்சிபுரம் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் சென்னை அல்லது புதுச்சேரி அல்லது வேலூரில் கலந்து கொள்ளலாம். சிலர் இங்கும், சிலர் அங்குமாகக் கலந்து கொள்ளக் கூடாது.
- ஒருமுறை வெற்றி வாய்ப்பை இழந்தவர் மீண்டும் மற்றொரு மையத்தில் பங்கேற்க இயலாது.
- ஒவ்வொரு மாணவரும் தாம் தேர்ந்தெடுக்கும் தலைப்பில் அதிகபட்சம் 5 நிமிடங்கள் பேசலாம்.
- கால் இறுதிச் சுற்றில் வென்றோர், அரை இறுதிச் சுற்றிலும் அதே தலைப்பிலேயே பேசலாம்.
- கால் இறுதி, அரை இறுதிச் சுற்றுக்களுக்கு பயணப்படி எதுவும் வழங்கப்பட மாட்டாது.
- இறுதிச் சுற்றுப் போட்டியில் பங்கு பெறுவோருக்கு மட்டுமே (சென்னை நீங்கலாக) பயணப்படி வழங்கப்படும்.
- போட்டியில் பங்கு பெறும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- சென்ற ஆண்டு நடைபெற்ற திருக்குறள் விழா பேச்சுப் போட்டியில் வெவ்வேறு பிரிவுகளில் மாநில அளவில் முதல் பரிசு வென்றவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள இயலாது.
- இத்துடன் இணைத்துள்ள விண்ணப்பத்தினை ஒவ்வொரு மாணவரும் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.
- கூடுதல் விண்ணப்பங்கள் தேவைப்பட்டால், விண்ணப்பப் படிவத்தை நகல் எடுத்துக் கொள்ளலாம்..

**திருக்குறள் விழா 2012**
**மாணவர் பேச்சுப் போட்டி**

**ஊடகப் பங்குதாரர் (Media Partner) :**

JAYA PLUS

**ஸ்ரீராம் இலக்கியக் கழகம்**
கிரீம்ஸ் துகார், 149, கிரீம்ஸ் ரோடு, சென்னை–600 006